செய்தி வெளியீடு எண் : 2119 நாள் : 24.11.2022

# தமிழ்நாடு அரசு

# பொது நூலக இயக்ககம்

## கலைஞர் நினைவு நூலகம், அண்ணா நூற்றாண்டு நூலகங்களுக்கு நூல் கொள்முதல்

மதுரையில் அமையவுள்ள கலைஞர் நினைவு நூலகம் மற்றும் சென்னை அண்ணா நூற்றாண்டு நூலகம் ஆகியவற்றிற்குத் தேவையான நூல்கள்/ மின் நூல்கள் கொள்முதல் செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கலைஞர் நூற்றாண்டு நூலகமானது அடித்தளம் மற்றும் தரைத்தளம் முதல் ஆறு தளங்களுடன் தமிழ், ஆங்கிலம் மற்றும் பிற மொழி நூல்களும், அறிவியல், மருத்துவம், கணிணி அறிவியல், பொறியியல், தொழில்நுட்பம், வரலாறு உட்பட அனைத்து பாடங்களிலும் புகழ்பெற்ற நூல்கள் அமையப்பெறும். இந்நூலகமானது வாசகர்களுக்கு நூல்களை இரவல் வழங்கும் நூலகமாகவும், குறிப்புதவி நூலகமாகவும் செயல்படும். மேலும், குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரையிலான அனைத்து மக்களும் பயன்படுத்தும் வகையில் நூல்கள், நூலகச் சேவைகள் மற்றும் வசதிகள் வழங்கப்படும்.

இந்நூலகங்களுக்கான நூல்கள் கொள்முதல் செய்வது தொடர்பாக, புத்தக வெளியீட்டாளர்கள் மற்றும் விற்பனையாளர்களிடமிருந்து நூல்கள் வரவேற்கப்படுகின்றன. இந்நூல் கொள்முதலில் பங்கேற்க, உரிய படிவத்தில், வெளியிடப்பட்டுள்ள நூல் விவரங்களை பூர்த்தி செய்து மாதிரி படியுடன் (Specimen Copy) முதன்மை நூலகர் மற்றும் தகவல் அலுவலர், அண்ணா நூற்றாண்டு நூலகம், சென்னை என்ற முகவரிக்கு 09.12.2022 பிற்பகல் 5.00 மணிக்குள் அனுப்பி வைக்க

வேண்டும். மேலும், நூல்களின் பட்டியலை கீழ்குறிப்பிட்ட அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் இணையதள முகவரியில் (www.annacentenarylibrary.org) வழங்கப்பட்டுள்ள படிவத்தில் Unicode Fontஇல் பூர்த்தி செய்ய வேண்டும், மற்றும் Microsoft Excel வடிவில் kclbookselection@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரிக்கு மின்னஞ்சலாகவும் மேற்குறிப்பிட்டுள்ள காலவரையறைக்குள் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.

பொது நூலக இயக்குநர் (மு.கூ.பொ.)

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in